# Sadakathullah Appa College

*An Autonomous Institution, Re-Accredited by NAAC at an 'A' Grade, *ISO 9001 : 2015 Certified*

## MANITHAM

### பாளை சதக்கத்துல்லா கல்லூரி சார்பில்

# ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்கல்

நெல்லை, மே 4: பாளை சதக்கத்துல்லா கல்லூரியில் கடந்த 2017ம் ஆண்டு துவக்கப்பட்ட 'மனிதம்' என்ற அமைப்பானது, சாலையில் மனநலம் பாதித்த நிலையில் திரியும் ஆதரவற்றவர்களை தேடி கண்டுபிடித்து ஞாயிற்றுக்கிழமை மற்றும் முக்கிய தினங்களில் அவர்களுக்கு உணவு, உடை வழங்கும் பணியில் கடந்த 3 ஆண்டுகளாக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் பரவலை தடுக்க பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் பசியால் வாடித்தவித்து வரும் ஆதரவற்றவர்களுக்கும், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கும் தினமும் சுமார் 80 முதல் 100 பேருக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டன. கல்லூரி முதல்வர் முகமது சாதிக், கல்லூரி அலுவலர் சரவணவேல், முன்னாள் மாணவர் கணேஷ் அருண் உள்ளிட்டோர் தினமும் உணவு, குடிநீர் உள்ளிட்டவற்றை வழங்கி வருகின்றனர்.

மனிதநேயத்துடன் இச்சேவையில் ஈடுபட்டுள்ள கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், முன்னாள் மாணவர்கள் உள்ளிட்ட மனிதநேயம் அமைப்பினரை கல்லூரி நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் பாராட்டினர்.



பாளையில் ஆதரவற்றோருக்கு சதக்கத்துல்லா கல்லூரியின் மனிதம் அமைப்பு சார்பில் உணவு வழங்கப்பட்டது.

# பாளை.யால ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்கல்

திருநெல்வேலி, ஏப். 28—

பாளை., சதக்கத் துல்லா அப்பா கல்லூரி, மனிதம் மாணவர் சேவை அமைப்பு சார்பில் மக்களுக்கு உணவு வழங்கப் பட்டது.

பாளை., சதக்கத் துல்லா அப்பா கல்லூரியில் செயல்படும் மனிதம் அமைப்பு சார்பில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ரோட்டோரம் வசிக்கும் ஆதரவற்றவர்களுக்கு உணவு, உடை வழங்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் பாதிப்பால் ஊரடங்கு அமலில் உள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள வறிய நிலையில் உள்ள மக்களுக்கு கடந்த 31 நாட்களாக உணவு வழங்கப்பட்டது.

பாளை., சாந்தி நகர், மகாராஜ நகர், தியாகராஜ நகர், ரகுமத் நகர், கே.டி.சி., நகர் பகுதிகளில் ஆதரவற்றவர்களுக்கு கல்லூரி முதல்வர் முகமது சாதிக், அலுவலர் சரவணவேல் தலைமையில் மாணவர்கள் உணவுப் பொட்டலங்கள் வழங்கினர்.



பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் செயல்பட்டு வரும் மனிதம் அமைப்பின் சார்பில் பசியால் வாடித் தவிக்கும் ஆதரவற்ற நபர்களுக்கு கல்லூரி முதல்வர் முகம்மது சாதிக் அலுவலர் சரவணவேல் மற்றும் இமாம் ஆகியோர் நேரடியாக சென்று உணவுகளை வழங்கினர்



Our team of volunteers serving food to destitute in a temple



Our Principal distributing food parcels



Our Principal distributing food parcels

Kathir TV Coverage of Manitham on YOUTUBE Link: https://youtu.be/QU9l_fHfxSE